207 No. M. 2797. 207 (விலை அணா ஒன்று.)



VARTHAGA OOLIAN.

Trichinopoly. | Monthly Journal of Commerce, Trade and Industry. | April 1934

மலர் 2.] திருச்சினுப்பள்ளி ஏப்ரல்-மீ -1934 [இதழ் 22

"வர்த்தக ஊழியன்" வருட சந்தா.
உள்நாட்டிற்கு ரூ. 1. வெளி நாட்டிற்கு ரூ. 1—8—0
விளம்பர விகிதம்.
அங்குலம் ஒன்றுக்கு ரூ. 0—8—0.
பக்கம் ஒன்றுக்கு ரூ. 10—0—0.
அரை பக்கத்திற்கு ரூ. 6. ராப்பர் பக்கத்திற்கு ரூ. 25.
முன்பணமில்லாத விளம்பரங்கள்
பிரசுரிக்க முடியாது. கீழ்க்கால விளம்பரங்களுக்கு
மானேஜருக்கு எழுதவும்.

ஆசிரியர்—திரு. டி. வி. கே. நாயுடு.

அட்டவணை.

வரி பளுவு	243
சிறுமணித்திரள்	244
நாணய மாற்றம்	245
மதிப்புரைகள்	246
வர்த்தக குறிவழக்குகள்	246
உலக வர்த்தகம்	247
ஜப்பான் வர்த்தக அபிவிருத்தி	248
உலக விநோதங்கள்	249
வாழைப்பழ ஏற்றுமதி	250
Mysore Page	251
World Trade	253
Trade Secrets	254
மார்க்கட்டின் நிலவரம்	255
தென்னிந்திய வர்த்தக சங்கம்	256
இந்திய வர்த்தகம்	257
சாமான்களுக்கு ரயில்வே சார்ஜ்கள்	258

10 APR 1934 MADRAS

"VARTHAGA OOLIAN"
Annual Subscription.
Inland Rs. 1—0—0. Foreign Rs. 1—8—0.
Advertisement Tariff Per Insertion.
One inch Rs. 0—8—0. One Page Rs. 10—0—0
Half Page Rs. 6—0—0. Wrapper Page Rs. 25
Advertisement without prepayment will not be considered. For further particulars write to the Manager.

HULLO! HULLO!!
HOW IS YOUR BUSINESS?
DON'T BE BROKEN HEARTED.
BROAD CAST YOUR BUSINESS.
MESSAGES THROUGH
"VARTHAGA OOLIAN"
AND PROSPER IN TRADE
Apply to:—
Manager, "Varthaga Oolian"
TRICHINOPOLY, SOUTH INDIA.

T.R. ரெங்கசாமிநாயுடு

வர்ணம் & கண்ணாடி வியாபாரம்,

341, 42, பெரியகடைவீதி, திருச்சினாப்பள்ளி.

எம்மிடம் பிரசித்திபெற்ற கம்பெனிகளின் நேர்த்தியான வார்னீஷ் வர்ணங்கள், முகம் பார்க்கும் நிலைக்கண்ணாடிகள், ஜன்னல் கண்ணாடிகள், கலர் கண்ணாடிகள்.

ராஜா ரவிவர்மாவின் அழகிய சித்திரப்படங்கள், ஜெர்மன் & இங்கிலீஷ் லேடி & சீனரி படங்கள், போஸ்டு கார்டு படங்கள், படங்களுக்கு வேண்டிய சட்டம் கண்ணாடிகள் கால் அங்குல வெளிச்ச கண்ணாடிகள் அட்டை, டின் பிளேட் வகைகள்.

திருவிழாக்களுக்கு வேண்டிய கலர் காகிதங்கள், வர்த்தி தகடுகள், கண்ணாடி மணி தினுசுகள், அசல் தங்கம் & வெள்ளி ரேக்குகள் முதலியவைகள் விலை சரசமாயும் நயமானதாயும் கிடைக்கும்.

ஒருமுறை ஆர்டர் கொடுத்து பாருங்கள்.

இனாம்! **இனாம்!!**

என் அனுபவ சாஸ்திரீய

தேகாப்பியாச முறை



இது எல்லோருக்கும் இனாமாக அளிக்கப்படும்.

இப்புத்தகத்தில் தேகாப்பியாச முறையைப்பற்றி நன்றாக விவரித்து எழுதப்பட்டிருக்கின்றது. இது தவிர என்னுடையதும் மற்றும் என்னுடைய சிஷ்யர்களுடையதுமான அநேக புகைப்படங்கள் தெளிவாக அச்சிடப்பட்டிருக்கின்றன. எவன் தன் தேகத்தை அபிவிருத்தி செய்து ஆரோக்கியமாக இருக்க விரும்புகிறானோ அவன் இப்புத்தகத்தை வாசிக்க வேண்டும்.

தபால் சார்ஜுக்காக இரண்டு அணா இந்திய போஸ்டல் ஸ்டாம்பு அனுப்பவும்.

பிரபோசர்: **எம். வி. கிருஷ்ணா ராவ்,**

உதகமண்டலம், (நீலகிரி.)

10 APR 1934

சந்தாதார்களுக்கு அறிவிப்பு

சந்தாதார்கள் தங்கள் சந்தாக்களை கூடிய சீக்கிரம் அனுப்பிவைக்கும்படியாக கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மானேஜர்.

“நாணயம் நனி பேண்”

“வர்த்தக ஊழியன்”

திருச்சினுப்பள்ளி

1934-ஹு ஏப்ரல்-மீ

வரிபளுவு

(Burden of Taxation.)

இந்திய ஜனங்கள் வரிப்பளுவை தாங்க முடியாமல் அவதிப்படுவது வெட்டவெளிச்சமாகயிருந்தபோதிலும் வாணிபத்தொழில் நடத்தும் வர்த்தகர்கள் வரிப்பளுவினுல் கஷ்டப்படுவது சொல்லொண்ணுத நிலைமையிலிருக்கிறது. வர்த்தகர்களின் வரிபளுவை நிவர்த்திக்கவேண்டுமென்று பலதடவைகளில் தெரியப்படுத்தியிருக்கின்றேம். செவிடன் காதில் சங்கூதினுல் எத்தன்மையதோ அவ்விதமே கவர்ன்மெண்டார் அசட்டை செய்து வருகின்றுர்கள். நமது பிரதிநிதிகள் சட்டசபைகளில் எவ்வளவுதான் வாக்குவன்மையினுல் பேசினுலும் சில சோணங்கிகளின் தயவினுல் வர்த்தகர்களுக்கு சாதகமாக காரியங்கள் நடைபெறுவதில்லை. மேலும் ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத்தாழ்ப்பாள் என்றபழமொழிப்படி வரிகுறையுமென்று, சாதகபக்ஷியைப்போல் வர்த்தகர்கள் எதிர் பார்த்துக் கோண்டிருக்கையில், இவ்வருடபட்ஜட்டில் புதிய வரிகளை ஏற்படுத்தி, ஏற்கனவேதூக்கமுடியாத நிலைமையிலிருக்கும்வர்த்தகர்களை எழுந்திருக்கமுடியாத நிலைமையில் செய்துவிட்டார்கள். புதிய வரிகளை கண்டிக்க பலர்முயற்சி எடுத்துக்கோண்டும் பிரயோஜனம் ஏற்பட்டதாக தெரியவில்லை. இந்திய சட்டசபையில் தொடர்ச்சியாக விவாதம் செய்து வரிகளை ரத்து செய்வதற்கு இல்லாமல் இடையிடையே விடுமுறை நாட்கள் வந்து குறுக்கிட்டன. சட்டசபை கூட்டங்களை இரவில் வைத்து துரிதமாக நடக்கும்படி நேர்ட்டதோடும், சட்டசபை விதிகளையும்சஸ்பெண்டுசெய்யவேண்டியநிலைமையும் ஏற்பட்டுவிட்டன இவைகளையெல்லாம் கவனித்தால் வர்த்தகர்களுக்கு நல்ல காலம் இன்னும் வரவில்லை போலும். எவ்வளவுதான் அவசரம் அவசரமாக காரியங்கள் செய்தாலும் சில கோடாலிக் காம்புகளின் சகாயத்தினுல், கவர்ன்மெண்டாரவர்கள் கோள்கையை நிறைவேற்றிக்கோள்ள சாதகம் ஏற்பட்டுவிட்டது. வர்த்தகர்களுக்கு முதல்படியாக உள்ளது கடிதப்போக்கு வரத்து. தபால் கட்டணங்கள் அதிகமாகயிருக்கிறதேன்றும், குறைக்கவேண்டுமேன்றும் பன் முறை மன்றுடியதன்மேல், கவர்ன்மெண்டார் அரைத்தோலா எடையுள்ள கடிதங்களுக்கு ஒரு அணு ஸ்டாம்பு ஒட்டும்படி குறைத்தார்கள். அரைத்தோலா எடையில் கடிதம் போட முடியாதேன்று நுபித்து காண்பித்து, ஒரு தோலாவுக்காகிலும் உயர்த்த வேண்டுமேன்றுக் கேட்டுக்கோண்டும், கவர்ன்மெண்டார் பிடிவாதமாக ஒப்புக்கோள்ளவில்லை. அரைத்தோலா எடையுள்ள கவரினுல் ஜனங்களுக்கு கஷ்டம்தான் ஏற்படுமேயன்றி நன்மைஒருக்காலும் ஏற்படாது. கவர் சம்பந்தமாக வேறு பல திருத்தங்களைகோண்டுவந்திருந்தும் கவர்ன்மெண்டார் எதிர்த்து தோற்கடித்துவிட்டார்கள். கார்டு முக்கால் அணுவாகயிருப்பதைஅரையணுவுக்காகிலும் குறைக்கவேண்டுமேன்றுகேட்டுக் கோண்டதை சட்டை செய்யவில்லை. விலைகுறைவாகயிருந்தால் அதிகம் விற்பனையாகுமேன்றும், அதனுல் லாபம் அதிகம்கிடைக்குமேன்ற அனுபவத்தை கவர்ன்மெண்ட்மெம்பர் அறியமாட்டாரா? நாம் ஏற்கனவே எழுதியிருந்தது போல், காலணு கார்டுக்குகூடவா விதியில்லையேன்று ஒருவருக்கோருவர் சந்தித்தால் பேசிக்கோள்வதை, எல்லோரும் அறிவார்கள். கார்டின் விலையைக் குறைத்திருந்தால் கவர்ன்மெண்டுக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்காது. மேலும் வர்த்தகர்கள் தங்களுடைய சரக்குகளை பற்றியவிளம்பரங்களையும் துண்டுபிரசுரங்களையும் புக்போஸ்டு மூலமாக அரையணு ஸ்டாம்பு ஒட்டி அனுப்பிக்கோண்டிருந்ததை இப்பொழுது முக்கால் அணுவுக்கு உயர்த்திவிட்டார்கள். இதனுல் வியாபாரம் பெருகுவதற்குமிகுந்த இடையூறு ஏற்படுமேன்பதில் சந்தேகமில்லை. வர்த்தகர்கள் மிகவும் பாதிக்கப்படுவார்கள். மேலும் வியாபாரத்தில் வர்த்தகர்கள் ஒரு சிறிய துகையை சம்பாதித்தாலும், வருமானவரி இலாகா அதிகாரிகள் அவர்களை விடாமல், அந்தத்துகைக்கும் வருமான வரியை விதித்து, இம்சிக்கின்றுர்கள். **1000** நுபாய்க்கு வருமானவரி விதிப்பதை நீக்கிவிடவேண்டுமேன்று கேட்டுக்கோண்டும், இவ்வருடத்தில் நீக்கி விடுவார்களேன்று எதிர் பார்த்தும், கவர்ன்மெண்டார், இந்த வரியையும் நீக்கப் பிரியப்படவில்லை. மாட்டுத்தோல் ஏற்றுமதி வரியை மட்டும் நீக்கிவிட்டார்கள். இதனுல் மேல் நாட்டு வர்த்தகர்களுக்கு சௌகர்யமேயன்றி இந்திய கைத்தொழில் பாதிக்கப்படுமேன்பதில் ஆக்ஷேபணையில்லை. சென்னை மாகாணத்தில் தோல்பதனிடுதல் ஒரு முக்கிய கைத்தொழிலாகயிருக்கின்றன. இந்த தொழிலின் முன்னேற்றத்திற்கும் அபாயம் ஏற்பட்டுவிட்டன. ஆட்டுத்தோலுக்கும் ஏற்றுமதி வரியை குறைக்கவேண்டுமேன்று மேல் நாட்டார் கிளர்ச்சி செய்கின்றுர்கள்

சிறுமணித்திறள்.

Editorial Notes.

வாழ்த்துகிறேம்.

நமது பத்திரிகையின் மானேஜர் திரு. டி. என். சுந்தரராஜலு நாயுடு அவர்களுக்கு ஏப்ரல் மாதம் 6வ வெள்ளிக்கிழமை திருமணம் நடைபெறப்போவதைக்கேட்டு மகிழ்ச்சியடைவதோடும், மணமக்களுக்கு நம்முடைய ஆசீர்வாதத்தை தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

* * *

புதிய ரேவினியூ ஸ்டாம்புகள்.

1934-ம் வருடம் ஏப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்து நோட்டைய பாண்டுகள் முதலியவைகளுக்கு இது வரையில் உபயோகித்துவந்த தபால் ஸ்டாம்புகளை உபயோகிக்கக் கூடாதென்றும் இதற்கென்று பிரத்தியேகமாக ஸ்டாம்புகள் உபயோகிக்க வேண்டுமென்றும் இதற்காக புது மாதிரிஸ்டாம்புகள் கவர்ன்மெண்டாரால் வெளியிடப்பட்டிருப்பதையும் மற்ருேரிடத்தில் பிரசுரித்துள்ளோம். பொது ஜனங்களும் வர்த்தகர்களும் அமுலுக்கு வருகின்ற தேதியை கவனத்தில் வைத்து நடந்து கொள்ள வேண்டும். கவர்ன்மெண்டாருக்குஒரேஸ்டாம்பாயிருந்ததை பிரித்ததினுல் நஷ்டம் ஏற்படுமேயன்றி அவர்கள் எதிர்பார்த்த லாபம் கிடைக்காதென்பதே நமது அபிப்பிராயம்.

* * *

8 லட்சம் பேர்களை காணும்.

1932-33-ம் வருடத்தில் தபால் மூலமாக அனுப்பப்பட்ட கடிதங்கள் முதலானவைகள், மணியார்டர் நீங்கலாக இந்தியாவிலிருக்கும் பல டெட்லெட்டர் ஆபீசுகளுக்கு அனுப்பியவைகளின் மொத்தம் 7,246,000. முந்தின வருடத்தில் 8,593,000. இவைகளில் 100-க்கு 39 விலாசதாரரைக் கண்டுபிடித்து கொடுக்கப்பட்டன. 100-க்கு 52 எழுதியவருக்கே திருப்பி அனுப்பப்பட்டன 100-க்கு 9 கொடுக்கப்படாதவைகள் இம்மாதிரியாக ஒதுக்கிவைக்கப்பட்டகடிதங்களின் எண்ணிக்கை 802,000. முக்கியமாக அந்தந்த இடங்களில் பேசப்படும் பாஷைகளில் விலாசம் எழுதப்படாததின் குறையாம். மேலும் சில கடிதங்கள் மேல் விலாசங்களை எழுதாமல் போடப்பட்டிருந்தனவாம். அவைகளை திறந்துபார்த்த பொழுது நோட்டுகளும் செக்குகளும் நாணயங்களுமிருந்தனவாம். இவ்விதம் சேகரம் செய்த துகை 5 2/3லட்சம் ரூபாய் இதிலிருந்தாகிலும் இனிமேல் பொதுஜனங்கள் மிக மிக ஜாக்ரதையாகயிருப்பார்களென்று நம்புகிறோம்.

வருந்துகிறேம்.

நமது பத்திரிகையின் பொக்கிஷதாரர் திரு. டி. ஆர். குப்புசாமி நாயுடு அவர்களுடைய 3 வயதுள்ள ஏகபுத்ரன் வைசூரி நோயினுல் சில தினங்கள் கஷ்டப்பட்டு 29-3-34ல் காலஞ்சென்றதற்காக நாம் வருந்துவதுடன் நமது அனுதாபத்தை அவருக்கும் அவருடைய குடும்பத்தாருக்கும் தெரியப்படுத்திக் கொள்ளுகிறோம்.

அகில இந்திய கைத்தொழில் பொருட் காக்ஷி.

இந்தியாவின் பல பாகங்களில் கைத்தொழில் பொருட் காட்சிகள் நடைபெற்று வருவதை நேயர்கள் அறிவார்கள். ஆனுல் அவைகள் தனிப்பட்ட முறையில் நடைபெற்றவைகளே யன்றி வர்த்தக சங்கத்தின் ஆதாவில் நடைபெற்றவைகளே யல்ல. மதுரையில் ஏப்ரல்மாதக் கடைசியில் சித்திரை திருவிழா சமயத்தில் அகில இந்தியகைத்தொழில் பொருட்காக்ஷி, மதுரை ராமனுதபுரம் வர்த்தகசங்க நிர்வாகஸ்தர்களால் நடைபெறப் போவதைக் கேழ்க்க மிகுந்த சந்தோஷமடைவார்கள். அவர்களால் நடைபெறும் மேற்படி பொருட்காக்ஷிக்கு இந்தியாவின் பல பாகங்களிலிருந்து வர்த்தகர்கள் சாமான்களை அனுப்பி வர்த்தகத்தை விருத்தி செய்து கொள்வதோடும், வர்த்தக சங்கத்தாருக்கும் ஊக்கமளிப்பார்களென்று நம்புகிறோம். இதுசம்மந்தமான விளம்பரம் மற்ருேரிடத்தில் பிரசுரிக்கப்பட்டிருப்பதையும் கவனிக்கவும்.

* * *

கோப்பறை இறக்குமதி.

மார்ச்சுமாத 'வர்த்தகஊழியன்' பத்திரிகையில் இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு ஏராளமாக கொப்பறை இறக்குமதியாகிறதென்றும் அவைகளை தடுக்கவேண்டுமென்றும் புள்ளிவிபரங்களுடன் எடுத்துக் காட்டியிருந்தோம். சென்னை சட்டசபை அங்கத்தினர்களில் சிலர் கோயம்புத்தூர் ராவ்பகதூர் டி. எ. ராமலிங்க செட்டியார் தலைமையில் கவர்னரை பேட்டி கண்டு குறைகளை தெரிவித்ததாயும் கவர்னர் இந்தியாகவர்ன்மெண்டுக்கு அவர்களால் தெரிவிக்கப்பட்ட விஷயங்களை தெரியப்படுத்துவதாயும் கூடுமானஉதவி செய்வதாக சொன்னதாயும் அறிகிறோம் இதன் மூலமாகவாவது விமோசனம் ஏற்படுமா?

நமது காருண்யகவர்ன்மெண்டார் இந்த வரியையும் குறைத்தாலும் குறைத்துவிடுவார்கள். மேலும் சிகரேட்டுக்கு வரி உயர்த்தப்பட்டிருக்கிறது. இப்பொழுதுள்ள வியாபார நிலைமை வர்த்தகர்களுக்கு அவ்வளவு நம்பிக்கையளிப்பதாகயில்லை. இம்மாதிரியான நிலைமையில் வரியைஉயர்த்திக்கொண்டேபோனுல் அவர்கள் கஷ்டப்பட வேண்டியதாயிருக்கும் வர்த்தக சங்கங்கள் கவர்ன்மெண்டாருக்கு அடிக்கடி எடுத்துக்காண்பிக்கவேண்டும். கவர்ன்மெண்டாரும் வரியைக்குறைத்து, வர்த்தகர்களின்கஷ்டத்தைநீக்கி, உதவி செய்யமுன் வருவார்களென்று எதிர்பார்க்கிறேம்.

வரவேற்கிறோம்.

வைசிராய் நிர்வாகசபை மெம்பர்கள் ஆங்கிலேய வர்த்தகர்கள் மகாநாடுகளில் கலந்துகொள்வதுபோல் இந்தியவர்த்தகர்கள் மகாநாடுகளில் கலந்து யோசனை சொல்லும்படி சென்ற மேமாத 'வர்த்தகஊழியன்' பத்திரிகையில் கேட்டுக்கொண்டதை அனுசரித்து டெல்லியில் கூடிய இந்திய வர்த்தகர்கள் மகாநாட்டில் அவர்கள் கலந்துகொண்டதாக கேட்டு மிகவும் சந்தோஷப்படுகிறோம். அவர்களை நாமும் வரவேற்பதுடன் அவர்கள் ஒத்துழைப்பினால் இந்திய வர்த்தகர்களுக்கு நன்மை யேற்படுமென்று நம்புகிறோம்.

* * *

சையாம் அரிசி

சென்னை துறைமுகத்தில் சையாம் இண்டோ சைனா தேசங்களிலிருந்து இறக்குமதியாகிற அரிசியைப்பற்றி ஏற்கனவே கண்டித்திருக்கிறோம் இந்தியா கவர்ன்மெண்டாரால் இவ்விஷயத்தைப்பற்றி பரிசீலனை செய்யப்பட்டு வருவதாயும் அறிகிறோம். இதன் மத்தியில் சென்னை மதராஸ் மெயில் டெல்லி நிருபர் அரிசி இறக்குமதியை தடைப்படுத்தி விட்டார்களென்ற சமாசாரத்தை வெளியிட்டதானது ஆறுதலளித்தது ஆனால் அதுவெத்துவெடியாகப்போயிற்று கவர்ன்மெண்டார் இன்னும் இவ்விஷயத்தைப்பற்றி அந்ததேசங்களின் கவர்ன்மெண்டாருடன் கலந்துபேசி வருவதாக சொல்லப்படுகிறது. சென்ற 12மாதங்களில் இறக்குமதியான அரிசி 15,000 டன் ஆனால் சமீபத்தில் 8மாதங்களுக்குள் இறக்குமதியான அரிசி 40, 00 டன் (சுமார் 400,000 மூட்டை) இம்மாதிரியாக இனியும் இறக்குமதியாவதை கவர்ன்மெண்டார் பார்த்துக்கொண்டிருந்து விவசாயிகளின் தலையில் மண்ணைப்போட உத்தேசமா அல்லது உடனே தடைபடுத்தப் போகிறார்களா?

குறைந்த செலவில்
நிறைந்த லாபம் பெற விரும்பினால்
வர்த்தக ஊழியனில்
விளம்பரம் செய்யுங்கள்.

பத்திரிகைகளின் வரவு.
(Publications Received)

London Chamber of Commerce Journal
Indian Mirror
The Standard Bank Monthly Review.
Indian Finance
Barclays Bank Monthly Review.
Indian Commerce
The Produce Markets Review.
Barclays Bank Monthly
Industry
[Trade Cables.
Commercial Tit Bits of India.
The Chemical Age.
Indo-Malayan Review
Guardian
Indian Colonial Review.
Business Friend
Mysore Chamber of Commerce [Bulletttin.

அறிவுவிளக்கம்
அமிர்தகுணபோதினி
ஆனந்தபோதினி.
ஆர்யதர்மம்
இந்தியா
ஈழகேசரி
ஐக்ய அரசு
களி ராட்டை
குமரன்
குறும்பன்
குமார விகடன்
சன்மார்க்கன்
செங்குந்தமித்திரன்
திருவாங்கூர் அபிமானி
தொண்டு செல்வம்
தேச நேசன்
நகர தூதன்
பர்மா நாடு
பாலவினோதினி
பாரதஜோதி
புரட்சி
வம்பன்
வினோதன்
வினோத நேசன்
விவேகாநந்தா
விஸ்வபந்து

WANTED

Capable agents of influence among merchants in all the important towns to canvas subscribers and to get advertisements for "Varthaga Oolian". Liberal terms to really capable workers.

Apply to:—The Manager,
Varthaga Oolian, Trichinopoly.

நாணய மாற்றம்.
(Exchange 31– 3—34.)

	பென்சு
பாங்ரேட் லண்டன் தந்தி	18
பாங்ரேட் லண்டன் தரிசனம்	18
லண்டன் தந்தி விற்கிறவிலை	18 1/32
தரிசன உண்டி விற்கிறவிலை	18 1/32

லண்டன்—அமெரிக்கா மேல் தந்தி ஸ்டர்லிங் பவுன் 1க்கு டாலர் 5-105/8

பாரிஸ் லண்டன் மேல் தந்தி ஸ்டர்லிங் பவுன் 1-க்கு பிராங்கு 77-56

பிரான்ஸ் மேல் தரிசன உண்டி விற்பனை ரூ. 100-க்கு பிராங்கு 560.

ஜர்மன் தரிசன உண்டி விற்பனை ரூ. 100-க்கு மார்க்கு 92.

அமெரிக்கா தரிசனஉண்டி விற்பனை டாலர் 100-க்கு ரூ. 270.

அமெரிக்கா தரிசன உண்டி வாங்குவது டாலர்100க்கு ரூ. 250.

சிங்கப்பூர் தரிசன உண்டி விற்பனை டாலர் 100-க்கு ரூ. 157¼.

சிங்கப்பூர் தரிசனஉண்டி வாங்குவது டாலர் 100-க்கு ரூ. 150.

ஹாங்காங் தந்தி அல்லது தரிசன உண்டிவிற்பனை டாலர்100-க்கு ரூ.106

ஷாங்காய் தந்தி அல்லது தரிசன உண்டி விற்பனை டாலர்100-க்கு ரூ. 97

ஜப்பான் தந்தி அல்லது தரிசன உண்டி விற்பனை என் 100-க்கு ரூ. 85.

ஜப்பான் 2-மாததவணை உண்டி வாங்குவது என் 100-க்கு ரூ. 100.

ஜாவா தந்தி அல்லது தரிசன உண்டி விற்பனைரூ. 100-க்கு கில்டர் 56.

ஜாவா தந்தி அல்லது தரிசன உண்டி வாங்குவது ரூ. 100-க்கு கில்டர் 100

வாரச்சந்தை திறப்புவிழா.

திருச்சி தாலூகா மேல கல்கண்டார் கோட்டை பஞ்சாயத்துபோர்டு வியாழக்கிழமை வாரச்சந்தை 29—3—34 உ பொன்மலை புது டைப்பிற்கும் கல்கண்டார் கோட்டை ரோடுக்கும் கீழ்புறமும், ரயில்வே ரோடுக்கும் வளத்தியார் குளத்திற்கும் வடக்கிலும் மேற்கிலும் உள்ள பெரியமைதானத்தில் ரயில்வே தொழிலாளர் சங்கத் தலைவரும், இந்த போர்டின் மெம்பருமான உயர் திரு. D. கிருஷ்ணசாமி பிள்ளையவர்கள் தலைமையில் திருச்சி ஜில்லா போர்டு பிரசிடெண்டு உயர்திரு. T. M. நாராயணசாமி பிள்ளை அவர்கள் திறந்துவைத்தார்கள். திறப்பாளருக்கு வரவேற்புப் பத்திரமொன்று போர்டாரால்வாசித்துக் கொடுக்கப்பட்டது.

இச்சந்தையில் விறகு காய்,கறி, தான்யங்கள், மாடு,ஆடு, வைக்கோல் முதலிய பலவும் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன. ஏராளமான ஜனங்கள் வந்திருந்தார்கள்,

மதிப்புரைகள்.

Reviews.

Price List.

We have received a copy of Price List from Bhaskar Prakash works, Hanchali Bijopur. It contains among others, medicines such as Scorpion Bite Bug Enemy, Magic Mosqutorial The prices are cheap.

The Holy year Hand Book:—

We were in receipt of a copy of the Holy Year Hand Book. It contains the description of the first Indian Pilgrimage to Jerusalem-Rome-Lourdes and the itinerary of the second Indian Pilgrimage. In addition the sacred Passion and the Holy Year 1933–34 have been added. The book should be read by every chrstian. It is priced annas four and can be had from the Satya Publishing House, Madras.

Oriental Government Security Life Assurance Company Ltd.

We have pleasure in announcing to our readers the glad news that the amount of New Life Assurance Business written by the Oriental last year was:- 38, 191 Policies Assuring Rs. 7,04,26,203 as compared with 29,982 Policies Assuring Rs. 5,94,00,727 in 1932 an increase of 8,209 Polices Assuring Rs. 1,10,25,476.

This is a record Business and exceeds the Company's record of 31,128 Policies for Rs. 6,50,04,539 in 1929 by 7,063 Policies for Rs. 54,21,664.

Established in 1874 the Company celebrates this year its Diamond Jubilee and in view of this happy event the results for 1933 must be considered noteworthy.

It is understood that the Trichinopoly Branch completed a record business last year,

The Maple Leaf Canadian Recipe Book:—

We acknowledge the receipt of a copy of the Maple Leaf Canadian Recipe Book. It is mainly intended for Housewivies. The Book gives an intelligent and constructive help in the preparation of "Eat what you can" and teaches them to be expert and diligent in the arts of Store Room and Still Room. This Book will be supplied free of charge upon application to the Director of Canadian Trade Publicity, Blackburn Road, London N. W. 6.

காலண்டர்கள் (Calendars).

திருச்சினுப்பள்ளி ஸ்ரீநிலையம் பிரஸ் ஆபீசிலிருந்து 1934-ம் வருட காலண்டர் கிடைக்கப்பெற்ருேம். தினசரி ஒரு தாள் கிழிக்கத்தக்கதும், இங்கிலீஷ், தமிழ், துலுக்கு தேதிகளும் ஒவ்வொரு தேதியில் திதி, நட்சத்திரம் முதலானவைகளும் அடங்கி யிருக்கின்றன. பார்வைக்கு அழகாயிருக்கிறது.

திருச்சினுப்பள்ளி முருக விலாஸ் ஜனனுகூலஅச சுக்கூடத்திலிருந்து காலண்டர்வரப்பெற்ருேம். 1934-ம் வருடம் பிப்ரவரி மாதத்திலிருந்து 1935-ம் வருடம் ஜனவரிமாதம் வரையில் மாதம் ஒரு ஷீட் வீதம் 12 மாதங்களுக்கு சேர்க்கப்பட்டிருக்கின்றன. தேதிகள் பெரிய எழுத்துக்களில் அச்சடிக்கப்பட்டிருப்பதுடன், ஞாபகக் குறிப்புகளை பதிவு செய்துகொள்ள இடம் ஒவ்வொரு மாதத்திலும் ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

1934-ம் வருஷ பலன்கள்.

சென்னை சோதிட சித்தாந்தி டி. பி. தர்மராஜ முதலியார் அவர்களிடமிருந்து 1934-ம் வருஷ பலன்கள் என்ற புஸ்தகம் கிடைக்சப் பெற்ருேம். ஒவ்வொரு வருடைய பெயரின் முதல் எழுத்தைக் கொண்டு ஒவ்வொரு மாதத்தின் பலாபலன்களை கண்டறியக் கூடிய வண்ணம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இதன் விலை அணு 0–4–0 வேண்டுபவர்கள் சென்னை திருவல்லிககேணி, 30, பிள்ளையார் கோவில் தெருவு, டாக்டர் டி. பி. தர்மராஜமுதலியார் அவர்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

ருஷிய புரட்சி

ருஷிய புரட்சி யென்ற பெயரிடப்பட்ட புஸ்தகம் கிடைக்கப்பெற்ருேம் அதில் ருஷ்ய புரட்சிக்கு மூலகாரணமாயிருந்த சம்பவங்களையும், புரட்சி தோன்றி சார்ஆட்சி கவிழ்க்கப்பட்டதையும் அதற்குப்பின் புதிய ஜனநாயக ஆட்சி எற்பட்டதையும், அந்த ஆட்சியும் பொதுஜனங்களுக்குத் திருப்தி யளிக்காதலால பொது உடைமை கோஷ்டியின் தலைவராகிய லெனிஞல் எதிர்க்கப்பட்டு அது பலவீனமடைந்ததையும், லெனின் கட்சி வலுவடைந்ததையும் விவரித்திருக்கிறது. இதன் விலை விலை அணு நான்கு. மதுரை சான்பாளையம், 1 வது தெரு, எஸ். சையது அஹமது அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

சைபிரஸ் (Cyprus) 1933ம் வருட வர்த்தகம் 1932ம் வருடத்தைவிட மோசமானதாகயிருக்கிறது. இறக்குமதி 1,257,368 பவுன் (1,347,595 பவுன்) எற்றுமதி 898,981 பவுன் (946, 132 பவுன்).

வர்த்தகக் குறிவழக்கு

நெ. 1, 2, 3 'குட்ரிஜ் டர்கிஷ்பாத் சோப்புகள்' குட்ரிச் சோப் கம்பெனியின் பிரத்தியேக ஐவேஜியாகுமென்றும், அந்த வியாபாரக் குறியைப் போல் மற்ருெருவர் வைத்துக்கொண்டால் அது சட்ட விரோதமென்றும் டெல்லி வழக்கொன்றில் சப்ஜட்ஜ் தீர்ப்புக்கூறினுர்.

கப்பல் செய்தி.

(SHIPPING NEWS)

1934-ம் வருடம் எப்ரல் மாதத்தில் சென்னை துறைமுகத்தில் எதிர்பார்க்கப்படும் சப்பல்களின் பெயர்களும், தேதிகளும்:—

மொஞ 1, லிக்டன்பெல்சு, சிட்டி ஆப்டண்டி 3, கிளான் கிராண்ட் 6, மார்கஹார், சிட்டி ஆப்கியோஸ் 8, சிம்லா, மல்போா 10, சிட்டி ஆப்யார்க் 16, பெஞர்டின்டிஸென்ட்பியர் 17, ஒல்ட்ஹாம், மேரியன் பெல்சு 18, சில்வர் மேபிள், கிளான்மக்ஜிலிவ்ரே 20, மனிபூர் 22, மொஞ 24, மஷோப்ரா 27, ஆக்ரா, ஆங்கர்ஸ் 28, ஷாஜஹான் 30.

உலக வர்த்தகம்.

(World Trade.)

சியாராலியோன் (Sierra Leone)

1933-ம் வருடம் டிசம்பர் மாதத்துடன் முடிவாகும் கால்வருட கணக்கின்படி 3786 அவுன்சு தங்கமும், 13,454 காரட் வைரமும் உற்பத்தி செய்யப்பட்டன.

பாலஸ்தீன் (Palestine)

1934-ம் வருடம் பிப்ரவரி மாதம் 14 தேதி வரையில் 157,000 கேசு திராக்ஷை பழங்களும், 12,700 கேசு எலுமிச்சம் பழங்களும், 2,395,235 கேசு ஆரஞ்சு பழங்களும் ஏற்றுமதி செய்யப்பட்டன.

மோரிசியஸ் (Mauritius)

டிசம்பர் மாதத்துடன் சர்க்கரை உற்பத்தியில் 265,000 டன் கிடைத்திருக்கிறது. 8000 டன் விற்பதற்காக பாக்கியிருக்கிறது. வரும் உற்பத்தி நல்ல நிலைமையிலிருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. 48700 டன்னுக்கு ஆர்டர் கிடைத்திருக்கிறது.

ஜப்பான் (Japan)

1933-ம் வருடம் நவம்பர் மாதத்துடன் முடிவான கணக்கின்படி ஜப்பான் தேச வர்த்தகத்தில் ஏற்றுமதி 1688 மிலியன் யென் இறக்குமதி 1732 மிலியன் யென். 1932-ம் வருடத்தில் இதே காலத்தில் வர்த்தகத்தைவிட 100-க்கு 36 வீதம் உயர்ந்திருக்கிறது.

இட்டாலி (Italy)

1933-ம் வருட 9-மாத கணக்கின்படி இறக்குமதி இட்டாலியில் 5537 மிலியன் லயர் ஏற்றுமதி 4478·3 மிலியன் லயர் இதே காலத்திற்கு சென்ற ஆண்டில் இறக்குமதி 6339·2 மிலியன் லயர் ஏற்றுமதி 5006·4 மிலியன் லயர் இங்கிலாந்தில் இந்த காலத்தில் 6,833,659 பவுன் விலை மதிப்புள்ள சாமான்கள் இறக்குமதி செய்யப்பட்டன. 6,751,436 பவுன் ஏற்றுமதி செய்யப்பட்டன.

அமெரிக்கா (United States)

1933-ம் வருடத்தில் முதல் 10 மாதங்களில் ஜமக்காளங்கள், கம்பளிகள், 11,415,899 சதுர அடி இறக்குமதி செய்யப்பட்டன. இதன்விலை 3,968,544 டாலர். இவைகள் பர்சியா தேசத்திலிருந்தும், சைனாவிலுமிருந்தும், அதிகமாக இறக்குமதி செய்யப்பட்டன.

யுனைடெட் கிங்டம் (United Kingdom)

1933-ம் வருட இறக்குமதி 675,847,365 பவுன் 1932-ல் 701,670,061 பவுன் ஏற்றுமதி 416,501,462 பவுன் 1932-ல் 416,045,264 பவுன் புகையிலை, குடிவகை உணவு பொருள்கள் சென்ற வருடத்தைவிட பிரஸ்தாப வருடத்தில் சுமார் 40 லட்சம் பவுன் குறைவு.

கானடா (Canada)

கானடா தேசத்திலிருந்து இங்கிலாந்துக்கு 1933-ம் வருடத்தில் 1,500,000 டஜன் முட்டைகள் ஏற்றுமதி செய்யப்பட்டன. இதற்கு முன் வருடத்திற்கு 10 அல்லது 15 மிலியன் டஜன் ஏற்றுமதி செய்துகொண்டிருந்தது.

பல்கேரியா (Bulgaria)

செப்டம்பர்மாதத்துடன் முடிவான 9 மாத காலத்தில் பல்கேரியாவில் ஏற்றுமதி 1,955,602,533 லேவா. முந்தின வருடத்தில் அதே காலத்தில் 2,267,592,287 லேவா. இறக்குமதி 1,677,218,088 லேவா. முந்தின வருடத்தில் 2,605,160,487 லேவா. நவம்பர் மாத வரையில் 2000 வாகன் திராக்ஷைபழம் ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.

ஆப்பிரிக்கா (Africa)

1933-ம் வருடத்தில் தென் ஆப்ரிக்காவின் ஏற்றுமதி 73,149,000 பவுன் இறக்குமதி 49,127,000. 1932-ம் வருடத்தில் ஏற்றுமதி 69,034,000 பவுன் இறக்குமதி. 32,739,000 பவுன் தென் மேற்கு ஆப்பிரிக்காவின் ஏற்றுமதி 1,435,913 பவுன் 1932-ல் 1,103,585 பவுன் இறக்குமதி. 1,019,454 பவுன் 1932-ல் 849,908 பவுன் நியாசாலாண்டில் 1933-ம் வருடம் நவம்பர் மாதம் முடிய இறக்குமதி 472,973 பவுன் 1932-ல் 577,770 பவுன் ஏற்றுமதி. 518,630 பவுன் 1932-ல் 652,475 பவுன் வடக்கு ரொடீசியாவில் நவம்பர் மாத முடிய இறக்குமதி 1,789,959 பவுன் 1932-ல் 1,829,402 பவுன் ஏற்றுமதி. 3,310,203 பவுன் 1932-ல் 2,474,702 பவுன்.

அனுபோக
கைத்தொழில் போதனி

இதிலடங்கிய அனேக ரகசிய முறைகளைக்கொண்டு, ஏழைகளானவரும் சொல்ப சிலவில் வெகு சுல்பமாய், சுக ஜீவனம் செய்யலாமென்பது உண்மை. வேண்டுவோர் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவும்,

கே. என். எஸ், அண்டு கோ.,
அரிமளம். (புதுக்கோட்டை.)

ஜேபியிலடங்கும் 'ரேடியோ'

கால்நடையாகச் செல்லும் பிரயாணியொருவன் நடந்து செல்கையிலேயே வெகு தூரத்திலிருக்கும் நண்பர்களோடு பேசலாமென்று தெரிகிறது சமீபத்தில் ஒரு ஆங்கில ரேடியோக் காட்சி நடந்தபோது அதில் வைக்கப்பட்டிருந்த ஒரு இயந்திரம் ஜேபியில் வைத்துக்கொள்ளத் தகுந்த அளவுக்குச் சிறியதாயிருந்தது. அதனுடைய ஒலி பரப்பும் கருவி குல்லாயிலடங்கக் கூடியதாயிருந்தது. பாட்டரிகளும் செய்தி வாங்கும் கருவிகளும்கூட ஜேபியில் போட்டுக்கொள்ளத் தகுந்தவையாயிருந்தன. இதன் வழியாக தற்போது பிரிட்டிஷ் போலீசார் மத்திய நிலையத்திலிருந்து செய்தியைக் கேட்டுவருகிருர்கள்.

ஆஸ்திரேலியா (Australia)

ஆஸ்திரேலியாவிலிருந்து 1927-ம் வருடத்தில் பெட்டி பழங்கள் 286294 டஜன் ஏற்றுமதி செய்யப்பட்டன. 1932-ல் 1,283,719 டஜன் இங்கிலாந்து அதிகமாகவே வாங்கியிருக்கின்றன.

பிரிட்டிஷ் கயானு (British Guiana)

1933-ம் வருடத்தில் சர்க்கரை உற்பத்தி 141975 டன். முந்தின வருடம் 148504 டன். தங்க விளைவு டிசம்பர் மாதத்தில் 3,002 அவுன்சு. சென்ற வருடத்தைவிட 1260 அவுன்சு அதிகம்.

எகிப்து (Egypt)

1933-ம் வருடத்தில் முதல் 9 மாதங்களில் எகிப்தில் இறக்குமதி 19,048209 பவுன். சென்ற வருடத்தில் 20,199,704 பவுன் ஏற்றுமதி. 18,735,746 பவுன் முந்தின வருடத்தில் 18,438,199 பவுன்.

ஜப்பான் வர்த்தக அபிவிருத்தி

உலகில் இன்று எந்த விடத்திலும் ஜப்பான் வர்த்தகத்தைப்பற்றிப் பேசாமலிருப்பதில்லை. பெரும்பான்மையான கைத்தொழில் நாடுகள் எல்லாம் ஜப்பானென்ற பெயரைக் கேட்ட மாத்திரத்திலேயே தவிக்கின்றன. தொழிற்சாலைத் தலைவர்களும் பதை பதைக்கின்றனர். பலர் எவ்வாறு ஜப்பானோடு போட்டிப்போடுவதென்று தெரியாது விழிக்கின்றனர். ஏனென்றால் எந்நாட்டினராலும் நினைக்கவும் முடியாத அவ்வளவு தாழ்ந்த விலைக்கு சாமான்களை விற்கின்றனர் ஜப்பானியர் சுருக்கமாகச் சொன்னால், மதத்தாலும், அரசியல் முறைகளாலும், நீதி போதனைகளாலும் சிற்சில தேசங்கள் பிறதேசங்களை ஆளுவதுபோல இன்று ஜப்பான் தன் வியாபாரமென்றும் ஆயுதத்தால் உலக மார்க்கட்டுகளை யாளுகின்றது என்னலாம்.

ஜப்பானியர் என்னென்ன சாமான்கள் செய்கின்றார்களென்றால் அதற்கு ஒரு சரியான ஜாபிதாவைக் கொடுத்துவிட முடியாது. ஜப்பான் சாமான் ஆலயங்களில் காணப்படுகிறது; கல்யாண வீடுகளில் காணப்படுகிறது: கேத வீடுகளில் காணப்படுகிறது; காபி ஹோட்டல்களில் காணப்படுகிறது; அச்சாபீசுகளில் காணப்படுகிறது; பள்ளிக்கூடங்களில் காணப்படுகிறது; பார்பர் ஷாப்புகளில் காணப்படுகிறது; ஒவ்வொரு சிறுவனின் கையிலும், வயது வந்தவர்களின் உடம்பிலும், உத்தியோகஸ்தர் ஜேபியிலும் காணப்படுகிறது. உப்புத் தொட்டுக் கற்பூரம் வரையிலும் செய்கின்றது ஜப்பான் என்றால் மிகவும் பொருந்தும்.

தினந்தினம் அங்கிருந்து கிடைக்கும் செய்திகளைப் பார்த்தால் ஆச்சரியம் இல்லாமற்போகா ! சமீபத்தில மோட்டார்களை செய்து வெளியிட்டிருக்கின்றதாம் ஜப்பான். ஒரு செய்தியால் முதல் கார்கள் தென்னாப்பிரிக்காவுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன வென்றும் சர்க்கார் அதிக சுங்கவரி போடாமலிருந்தால் 60 பவுனுக்கு ஒரு மோட்டார் விகிதம் கொடுக்க முடியுமென்றும் தெரிகிறது …………60 பவுனுக்கு ஒரு மோட்டார் என்றால் யார்தான் ஆச்சரியப்பட மாட்டார்கள்!

இதேபோல சைகில்களை ஏராளமாகச் செய்து நாலா பாகங்கட்கும் அனுப்பியுள்ளது. இந்தியாவின் பற்பல விடங்களில் (லாபம், சுங்க வரி, கப்பற்கூலி, ஊலோக விலை முதலிய வெல்லாம் சேர்த்து) சைகில் ஒன்று 15 ரூபாய் விகிதம் விற்கப்படுகிறது.

பௌண்டன் பேனாக்கள் இங்கிலாந்திலேயே—பௌண்டன் பேனாக்களின் உற்பத்தி நிலத்திலேயே—3 அணாவுக்கு விற்கப்படுகிறதாம்! 1930-ம் வருடத்தில் ஜப்பான் $2\frac{1}{2}$ லட்சம் பௌண்டன் பேனாக்களை உற்பத்தி செய்து வெளிநாடுகட்கு அனுப்பியதாகத் தெரிகிறது. முதல் முதலில் பேனா தொழிற்சாலை 1920-ல் தான் நிறுவப்பட்டதாம். பேனாக்களை இவ்வளவு மலிவாகக் கொடுப்பதற்குக் காரணம் அங்கு அத்தொழில் குடிசைத் தொழிலாகச் செய்யப்படுகின்றதென்றும் பெண்களே அத்தொழிலைத் தம் ஓய்வு நேரங்களில் செய்து முடிக்கின்றனரென்று சொல்லப்படுகின்றது.

துணி வியாபாரத்தில் இங்கிலாந்துதான் முதன்மையாக இருந்து வந்தது. ஜப்பான் அதிலும் வெற்றிபெற்று இங்கிலாந்தை அடக்கிவிட்டது. அதைக் காட்ட சில புள்ளி விவரங்களை தருகிறோம்.—

	பிரிட்டன்	ஜப்பான்
1928	38660	14180
1929	36710	18900
1930	24060	15710
1931	17160	14130
1932	21980	20310
1933(8 மாதம்)	15490	15680

இங்ஙனம் எத்துறையிலும் போட்டிபோடும் ஜப்பான் ஆப்ரிக்காவில் பல விடங்களில் பெரும் பெரும் மார்கட்டுகளை ஏற்படுத்திவிட்டதென்று இதனால் பலதொழில்தேசங்கள் ஜப்பானை வெல்ல இரகசியமாகவும் பரசியமாகவும் முயல்கின்றன.

மலையாளப் புகையிலை

யாழ்ப்பாணத்திலிருந்து மலையாளப் பிரதேசத்திற்கு அனுப்பப்பட்டு விற்பனையாகும் புகையிலைத்தொழிலின் நிலைமையைக்குறித்துச் சென்ற சிலகாலமாகச் சபைகளும், சங்கங்களும், ஆலோசனைகளும் நடைபெற்று வருவதைக் கண்டும் கேட்டுமிருக்கின்றோம். இத்தொழில் யாழ்ப்பாண மக்களின் ஜீவாதாரமாயுள்ளதென்பதும் யாவருமறிந்த உண்மையே அப்படியிருந்தும் அதற்காக வேண்டிய வழிகள் உண்மையாகக் கையாளப்படுகின்றனவோ எனக் கூறமுடியாதிருக்கின்றது. ஐக்கிய நாணய சங்கத்தவர்களால் நிர்வகிக்கப்பட்டிருக்கும் "யாழ்ப்பாணம் மலையாளப் புகையிலை வியாபாரசங்கம்" இடையிடையே நிர்வாகசபைக் கூட்டங்கள் நடாத்தி ஆலோசனை செய்துகொண்டே வருகிறது. அதற்கு எதிரிடையாக இங்குள்ள புகையிலை வியாபாரிகள் தங்கள் வருவாயை உத்தேசித்துப் பொதுஜனங்களுக்கு வீண் உபதேசங்களைப் புகட்டுகின்றனர். இவர்கள் கூறும் முதலாவது நியாயம் "தண்ணீர்த்தீர்வை" இந்தத்தண்ணீர்த் தீர்வையை இல்லாமற் செய்வதற்காக அரசாங்க சபைக்குப் பிரதிநிதிகளை அனுப்ப வேண்டுமென்று கூறுவார் சிலர், புகையிலைத் தண்ணீர்த் தீர்வைக்காகக் கவுன்சிலுக்கு ஒருவரையனுப்ப எண்ணுவதும், அதைப் பொது ஜனங்கள் ஆதரிக்கவேண்டுமென்று கேட்பதும் எமக்குப் பேரதிசயமாகக் காணப்படுகிறது. வரவுசெலவுத் திட்டத்தைச் சீர்படுத்த முடியாது தத்தளிக்கும் நிலைமையிலுள்ள எந்த அரசாங்கமும் தண்ணீர்த்தீர்வையையோ அல்லது வேறெத் தீர்வையையோ இல்லாமற் செய்ய ஒருப்படுமென்று கூறுவது, இந்த இருபதாம் நூற்றாண்டுச் சம்பிரதாயங்களுள் ஒன்றல்லவென்பதைப் பள்ளிச் சிறாரும் ஒத்துக்கொள்வரென்பதில் சிறிதும் ஐயமின்று. ஐக்கிய சங்கத்தார் செய்துவரும் முயற்சி புகையிலை வியாபாரிகளுக்குச் சிறிது கலக்கத்தைக் கொடுத்திருப்பதை அவர்களின் செயல் வெளிக்காட்டுகின்றதல்லவா? ஒரு தேசத்தின் நிரந்தரமான நன்மையைக் கருதாது சிலர் தங்கள் சுயநலத்தைக் கருதுவது ஏற்றதாகுமா? புகையிலைத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களிற் பலர் கல்வியறிவில்லாதவர்களாயிருப்பதனாலும் விஷயங்களை உள்ளவாறு விளங்குமாற்றலில்லாதவர்களாயிருப்பதாலும், வியாபாரிகள் தங்கள் திருவிளையாடல்களை எப்படியும் நடத்தலாமென்பது அவர்கள் கருத்துப்போலும்.

இப்பொழுது, யாழ்ப்பாணம் மலையாளப் புகையிலை வியாபாரச் சங்கத்தார் இவ்விடமிருந்து அனுப்பும் புகையிலையை ஏற்று விற்பனை செய்வதற்காக ஒரு பாரிய வியாபார சமுதாயத்தாருடன் ஒழுங்கு செய்திருப்பதாக அறிகின்றோம். அடுத்த வருடத்தில் புகையிலை ஏற்றுமதி செய்யப்படுமெனவும் ஷெ சங்க நிர்வாகிகள் சிலர் கூறுகின்றனர். புகையிலைத்தொழிலில் ஈடுபட்டிருப்போரும் பொதுநன்மை கருதும் ஏனைய யாவரும் சங்கத்திற் பங்குகள் பெற்று ஆதரவளிப்பார்களாயின் சிறிது காலத்துள் பெரும் நன்மை வந்தெய்துமென்று திடமாகக் கூறலாம். இதுவரை செட்டிபிள்ளைகளுக்கும், தரகர்களுக்கும் இறுத்த வட்டிப்பணம் முதலிய யாவும் இனிமேல் கமக்காரரையே சேருமென்பதுந் திண்ணம்.

(ஈழகேசரி)

உலக வினோதங்கள்.

World Industrial Wonders.

புஸ்தகங்களுக்கு மின்சார விளக்கு

புஸ்தகங்களை எளிதாக வாசிக்க ஒரு வித சிறு மின்சார விளக்குகளைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். இந்த விளக்குகள் சுமார் 4 அங்குல உயரமே இருக்கும். புஸ்தகங்களின் உறையில் இந்த விளக்கை மாட்டிக்கொள்ள ஏற்பாடு செய்திருப்பதோடு, கண்களுக்கு அதிக கூச்சத்தைக் கொடுக்காதபடி தடுக்க ஒரு வித மூடிகளையும் போட்டிருக்கிறாகள்.

உள்ளங்கையில் புகைப்பட கருவி

நமது உள்ளங்கையில் வைத்துக் கொள்ளக்கூடிய சிறு புகைப்படக்கருவியொன்றைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். இது சுமார் 2 அவுன்ஸ் நிறையே இருக்கிறது. எனினும் ஒரே சமயத்தில் 6 புகைப்படங்களைப் பிடிக்கலாம். இந்தப் படங்கள் தெளிவாக இருப்பதோடு, வேண்டுமானால் இதே படங்களை இதர புகைப்படக் கருவிகளைக் கொண்டு வேண்டிய அளவுக்குப் பெரிதாக்கிக் கொள்ளலாம். இந்த சிறு புகைப்படக் கருவியின் உயரம் 3 அங்குலம். விலையும் அதிகக் குறைவு. இந்தப் படங்களை சினிமா பிலிம்களுக்குக் கூட உபயோகிக்க முடியுமாம்.

டிரைவர் தூக்கத்துக்கு சனி

ரயில் வண்டி இரவில் ஓடிக்கொண்டிருக்கையில் டிரைவர் தூங்கிவிடவும் அதனால் பெரும் பெரும் அபாயம் ஏற்பட்டு விடவும் செய்யலாமல்லவா? அதனை நிவர்த்தி செய்து பிரயாணிகட்குப் பாதுகாப்பளிப்பதற்கான ஒரு இயந்திரத்தைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். அவ்வியந்திரம் ரயில் வண்டியின் சக்கரமொன்றினோடு இணைக்கப்பட்டிருக்கும் இவ்வியந்திரத்திற்கும் டிரைவர் நிற்கின்ற இடத்திற்கும் ஓர் கம்பி மூலம் சம்பந்த மேற்படுத்தப்பட்டு அதன் நுனியில் ஒரு பொத்தான் வைக்கப்பட்டிருக்கும். அப்பொத்தானில் பாரம் இருப்பது வரையிலும் ஒன்றும் நிகழ்வதில்லை டிரைவர் தூங்கி எங்காவது சாய்ந்துவிட்டால் பாரம் குறைந்துவிடவும் பொத்தானின் அழுத்தம் சக்கரத்தில் இருக்கும் இயந்திரத்துக்குச் சென்று ‘விசில்’ ஊதிவிடவும் செய்யும் அப்பொழுது டிரைவர் விழித்து விடக்கூடும்.

குளிரைத்தடுக்கும் காகிதம்.

மேனாடுகளில் அடிக்கடி பனியும், குளிரும் இருந்துகொண்டே யிருக்கும். மரக்கதவுகளுக்கு இந்தக் குளிரைத் தடுக்க சக்தி கிடையாது. ஆகவே அங்கு சமீபத்தில் ஒருவித காகிதத்தைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். இக்காகிதம் சாதாரணக் காகிதங்களைப்போல் மெல்லியதாயில்லை. நல்ல கனமாக விருக்கிறது இவற்றைக் கதவுகளில் அடித்துவிட்டால் அதிகக் குளிர் இருப்பதில்லை. குளிரையும், காற்றையும் தடுக்கும் சக்தி இந்த காகிதத்திற்கு இருக்கிறது. ஜலத்தில் இக்காகிதம் நனைவதும் கிடையாது. குளிர் நின்றபின் அக்காகிதங்களை நீக்கி விடலாம். வேண்டும்போது மீண்டும் உபயோகித்தும் கொள்ளலாம்.

ஆகாயத்தில் பறக்கும் சைகிள்.

ஓர் ஆங்கில தத்துவ சாஸ்திரி ஆகாயத்தில் பறந்து செல்லக்கூடிய சைகிள் ஒன்றை புதிதாய் கண்டு பிடித்திருக்கிறார். அதில் மோட்டார் சைக்கிளைப் போல் முன் புறத்தில் சிறியதோர் யந்திரம் அமைக்கப்பட்டிருக்கிறது. அதன் சக்திசக்கரங்களைச் சுழலவைக்கின்றது. ஆனால் விமான யந்திரசக்தி விமானத்தை மேலே எழுப்புவதுபோல சைகிள் சக்கரங்களும் சுழன்றதும் சைகிளை மேலே எழுப்பி விடுகின்றன விமானம் மேலே எழும்புவதற்கு விஸ்தாரமான விடமும் அது சிறுகச் சிறுக மேலே செல்வதற்கு வேண்டிய கால தாமதமும் இதற்கு வேண்டுவதில்லையாம். டென்னிஸ் விளையாட்டு மைதானமே இதற்குப் போதுமானதாகும் எனத் தெரிகிறது.

ஆகாய பேச்சு

ஆகாய விமானங்கள் வானத்தில் மேகத்தைக் கிழித்துக்கொண்டு செல்லும்போது பூமியிலுள்ளவர்களோடு பேசுவதென்றால் எவ்வளவு ஆச்சரியம்! இப்போது ஜர்மானியர் பல விமானங்களில் இறக்கைகளோடு சேர்த்து ஒலி பரப்பும் கருவிகளை யமைத்திருக்கிறார்கள். அவற்றின் வழியாக விமானிகள் மெதுவாகவேனும் பேசினால் பூமியிலிருப்பவர்கள் எவ்வளவு தூரத்திலிருந்தாலும் நன்றாகக் கேட்கலாம். இத்தகைய பேச்சு முறைக்கு ஆகாய பேச்சு என்று பெயர் சொல்லுகிறார்கள்.

ரேடியோ டைப் இயந்திரம்

தற்போது செய்யப் பட்டிருக்கும் ரேடியோ டைப் என்ற இயந்திரம் வழியாக ஓரிடத்தில் டைப் செய்யப்படும் செய்திகள் ‘டைப்’ ஆன அதே நிமிஷத்திலேயே மற்றொரு இடத்தில் தெரியும்படி செய்யலாம். ஒரு மின்சார டைப் ரைட்டரோடு ஒரு டிரான்ஸ்மிட்டரை இணைத்து ரிசீவிங் (வாங்கும்) இயந்திரமிருக்கும் பகுதியோடு இணைத்திருக்கின்றார்கள். இதில் வேலைசெய்யும் சக்தி ‘மைக்ரோவேவ்’ என்ற ஒலியலைகளாம் இவ்வாறு டைப் செய்தியை வாங்கும் நிலயத்தின் ஏரியல் 8 அடி நீளமுள்ள ஒரு இரும்புக்கம்பி. இதனுதவியால் டைப் செய்யப்படும் செய்தி அபூர்வமானதாம். எழுத்துக்கள் உயர்ந்து தாழ்வதும் பெரிய எழுத்து சின்ன எழுத்து விழுவதும் ஸ்பேஸ் (இடைவெளி) அமைவதும் பார்த்தால் எந்த மனிதனும் ஆச்சரியப்படவே செய்வான் வாங்கும் ஒலி எழுத்தாக மாற்றப்படுவது தான் மிக அற்புதம். இந்த இயந்திரத்திலிருக்கும் மற்றொரு அற்புதம் விஷயம் இரகசியமாக விருக்கின்றதென்பதாம். இந்த சௌகரியங்களை முன்னிட்டு இப்புதிய ஆச்சரிய இயந்திரம் யுத்த காலங்களில் உபயோகிக்கப்படுமென்று தெரிகிறது.

கண்ணாடி ரஸ்தா.

மோட்டார் ஓட்டிகள் ஒரு கண்ணாடித்துண்டு வழியில் கிடக்கக் காணப்பட்டால் பதை பதைப்பார்கள். ஆனால் லண்டன் நிபுணரான ஜியார்ஜ் ஜொரிக்கெட்ஸ் என்பவர் தனிக் கண்ணாடிகளால் ரஸ்தாவமைக்க யோசனை சொல்லுகிறார். அவர் கருத்து கண்ணாடி ரோட் பிரயாணத்திற்கு சுகமாயிருப்பதோடு பழுது பார்க்கவும் சௌகரியமாயிருக்கு மென்பதாகும். கண்ணாடியை செங்கற்களாக அமைத்து (ஒன்றோடொன்று நன்றாக இணையும்படியான நிலைமையில் செய்து) ரோடில் பரவிவிடவேண்டுமென்று அவர் அபிப்பிராயம் தெரிவிக்கிறார்.

ஏஜண்டுகள் தேவை.

“வர்த்தக ஊழியன்” பத்திரிகைக்கு சந்தாதாரர்கள் சேர்க்கவும், விற்கவும், விளம்பரங்கள் சேகரிக்கவும் செல்வாக்குள்ள ஏஜண்டுகள் முக்கிய பட்டணங்களில் தேவை.

வட இந்தியாவுக்கு வாழைப்பழ ஏற்றுமதி.

கடந்த டிசம்பர் மாதத்தில் ஸ்ரீரங்கத்தில் நடைபெற்ற திருச்சி ஜில்லா விவசாயிகளின் மகா நாட்டில் வட இந்தியாவுக்கு திருச்சி ஜில்லாவிலிருந்து வாழைப் பழம் அனுப்புவதற்கான வசதிகளைச் செய்துதரவேண்டுமென்று ரயில்வே அதிகாரிகளைக்கண்டு கேட்க தீர்மானம் செய்யப்பட்டிருந்ததும், முசிரி ஹைஸ்கூலில் கூடிய முசிரி சங்கத்தார் செய்திருந்த தீர்மானப்படியும் மகாநாட்டுத்தலைவர் தென்னிந்தியா ரயில்வே ஏஜண்டு சர். பி. ராத்ராவை வாழைப் பழ எற்றுமதி விஷயமாக உதவிசெய்ய வேண்டுமென்று கேட்டிருந்தார். அதற்கு ஏஜண்டு அளித்த பதில் வருமாறு:—

“மதராஸ் தென்மராட்டா, நைஜாம் ஸ்டேட், கிரேட் இந்தியன் பெனின்ஸுலா ரயில்வேக்களுக்குத் தனித்தனியாக கடிதம் அனுப்புவித்து, குறைந்த விகிதம்காட்டி சடிதியில்போக்குவரத்து வசதிக்கு ஏற்பாடு செய்து கொடுத்தால் வடக்கே ஆக்ரா, டெல்லி, கான்பூர் முதலிய விடங்களுக்கு இந்த் வியாபாரம் நன்கு நடைபெறும் என்று காட்டியிருந்தோம். நாங்கள் குறைந்த விகிதம் வசூலிக்கத் தயாராக இருப்பதாகவும் அங்ஙனமே அவர்களும் செய்தல் வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டோம். இதற்கு அவர்கள், சம்மதிக்கவில்லை மொத்தம் குத்து மதிப்பான தொகைக்குச் சம்மதிப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள் அந்தமாதிரி சார்ஜு வசூலிப்பதானால் சாதாரணமாக பார்சல் கட்டணத்தில் பாதி வீதம் வசூலாகும் கட்டணத்துக்கும் அதிகமாகிவிடும். மதருஸ் சதர்ன் மராட்டா ரயில்வே கம்பெனியார் மைலுக்கு 7 அணு வீதம் நான்கு சக்ர வண்டிக்கு வசூலிக்க ஒப்புக்கொண்டிருக்கின்றனர், இதர ரயில்வேக்கள் இம்மாதிரியான குறைந்த வர்த்தகத்துக்கு ஒப்புக்கொள்ளாததால் அந்த ரயில்வேக்களுக்கு நேரில் எழுதிக் கொள்ளுமாறு யோசனை சொல்லுகின்றேன். பிராட்கேஜில்வெளிச்சம்தரவல்ல 80 மணு பாரமுள்ள கூட்ஸ் வண்டிகள் எங்களிடம் கிடையாது அத்தகைய வண்டிகளால் சிக்கனம் ஏற்படுவதும் துர்லபம். வட இந்தியாவுக்கு வாழை அனுப்ப வேண்டின் தற்போது 10 டன் நிறை கொள்ளத்தக்க லக்கேஜ் வண்டிகள் கிடைக்குமாறு செய்து கொடுப்போம். ஜனங்கள் ஏறிச் செல்லும் பாசஞ்சர் எக்ஸ்பிரஸ் வண்டிகள் மூலம் சென்னைக்குக் கொண்டு சேர்த்துவிடுவோம். கிராண்ட் டிரங்கு எக்ஸ்பிரஸ் மூலம் மதராஸ் தென்மராட்டாரயில்வேயும், நைஸாம் ஸ்டேட் ரயில்வேயும் கொண்டு செல்ல சம்மதித்து விட்டார்கள்.” இவ்விஷயமாய் முடிவாகாமலிருக்கிற கட்டணவிகித விஷயமாய் நைஸாம் ஸ்டேட், கிரேட் இந்தியன் பெனின்ஸுலா ரயில்வேக்களுக்கு சங்கத்தார் விரிவான கடிதம் எழுதி தென் இந்தியா, மதராஸ் தென் மராட்டா ரயில்வேக்களைப் போல் வசூலிக்குமாறு கேட்டுக் கொள்ள சீக்கிரம் கூட்டம் கூடுமென்று தெரிகிறது.

திருச்சி ஜில்லா தமிழ் வியாபாரிகள் சங்கம்.

திருச்சி ஜில்லா தமிழ் வியாபாரிகள் சங்கத்தின் 21-வது நிர்வாகக் கூட்டம் 6—3—34 செவ்வாய்க்கிழமை மாலை 8 மணிக்கு சங்கக் கட்டிடத்தில் தலைவர் திருவாளர் பெ. அங்தோணியா பிள்ளை தலைமையில் நடைபெற்றது. அது சமயம் கீழ்க்கண்ட தீர்மானஙகள் ஏகமனதாய் நிறைவேறின.

1. தற்போது இந்தியா சட்ட சபையில் நெருப்பு பெட்டியின்மேல் குரோஸ் 1க்கு ரூ. 2-4-0வீதமும் புகையிலையின் மேல் பவுண்டு 1-க்கு ரூ. 2-6-0 வீதமும் அதிக வரி விதிக்கப் போவதானது தமிழ் ஜில்லாக்களில் முக்கிய குடிசைத்தொழிலான தீப்பெட்டி செய்பவர்களையும், புகையிலை விவசாயிகளையும், வியாபாரிகளையும் பாதிக்குமென்று இச் சங்கம் கருதுவதால் மேற்படி அதிக வரிகளை அமுலுக்கு கொண்டுவராதிருக்கும்படி சர்க்காரை இச்சங்கம் கேட்டுக் கொள்கிறது.

2. தந்திக்கு கட்டணம் குறைந்தது போல் வித்தியாசமில்லாமல் ஒரு கவருக்கு ஒரு அணு வீதமும் ஒரு கார்டுக்கு அரையணு வீதமும் குறைக்குமாறு சர்க்காரை இச்சங்கம் கேட்டுக்கொள்கிறது.

3. 15—2—34ல் நடந்த இச்சங்கத்தின் 20-வது நிர்வாகக் கூட்டத்தின் 6-வது தீர்மானத்தின் கடை வாடகையை குறைப்பதைப்பற்றியும் 7-வது தீர்மானத்தில் தொழில்வரி குறைப்பதைப் பற்றியும் இச்சங்கம் மீண்டும் முனிசிபல் சேர்மனைக் கேட்டுக்கொள்கிறது.

4. தண்ணீர் குழாய்களுடன் கூடிய கக்கூஸ்களை ஜெனரல் மார்க்கட்டில் கட்டுவதென ஒரு திட்டத்தை 1934-35 வருஷத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்துக்கொள்ளும்படி சேர்மனை இச் சங்கம் கேட்டுக்கொள்கிறது.

5. திருச்சி பழக்கடை தண்ணீர் பந்தல் கட்டிடத்தில் 25-2-34 மாலை 5-30 மணிக்கு நடந்த திருச்சி வரி செலுத்துவோர் கூட்டத்தின் தீர்மானங்களை இச் சங்கம் ஆமோதிக்கிறது.

6. இச்சங்கத்தின் வாசகசாலையாகயிருக்கும் ஜனரல் மார்க்கட்டின் 42 நெ. கடைக்கு 1934–35 வருஷம் முதல் கடை வாடகை இல்லாமல் செய்யுமாறு சேர்மனையும் கவுன்சிலர்களையும் இச்சங்கம் கேட்டுக்கொள்கிறது.

புரோநோட் முதலானவைகளுக்கு புதுஸ்டாம்பு

இப்போதிருக்கிறபடி லேபில்கள் ஒட்டவேண்டியது.

ரசீதுகளுக்கு	0	1	0
புரோநோட்டுகளுக்கு ரூ. 1			
முதல் 250 உள்பட	0	1	0
ரூ. 251 முதல் 1000உள்பட	0	2	0
ரூ. 1000க்கு மேற்பட்டால்	0	4	0

இவைகளுக்கு உபயோகமான ஒரு அணு, இரண்டணு, நான்கணு, லேபிள்களில் இப்போது “போஸ்டேஜ் & ரெவின்யூ” என்று அச்சிடப்பட்டிருக்கிறது.

1934 வருஷம் எப்பிரல் முதல் தேதிக்குப் பிறகு ஷெ தஸ்தாவேஜிகளுக்கு **மேற்கண்ட லேபிள்களை ஒட்டக்கூடாது.** புதுமாதிரி லேபிள்களை ஒட்டவேண்டும்.

புது லேபில்களில் மத்தியில் இராஜாத் தலை இராது. அந்த இடத்தில் ஒரு நட்க்ஷத்திரம் இருக்கும். லக்கங்களும் எழுத்துக்களும் வேறு மாதிரியாக இருக்கும்.

1934-ஹ எப்பிரல் 1உக்குப் பிறகு ஷெ தஸ்தா வேஜிகளுக்கு “பழைய மாதிரி போஸ்டேஜ் & ரெவின்யூ” லேபிள்களை ஒட்டினுல் தஸ்தாவேஜிகளே செல்லாது.

1-4-34உ முதல் எல்லா போஸ்டாபீசிகளிலும் புதுதினுசு லேபிள்கள் கிடைக்கும்.

‘வர்த்தக ஊழியன்’ முதல் வருட புத்தகம்.

வர்த்தக ஊழியன் முதல் வருட 12 இதழ்களும் சேர்ந்து பைண்டு செய்து புஸ்தகரூபமாக வெளியிடப்பட்டிருக்கிறது. வேண்டுபவர்கள் ஒரு ரூபாயும் போஸ்டேஜ் சார்ஜ் அணு நான்கு மானேஜருக்கு அனுப்பினுல் பைண்டு செய்த புஸ்தகம் அனுப்பப்படும். சொற்ப காப்பிகளே பைண்டு செய்திருப்பதால் உடனே எழுதி தருவித்துக் கொள்ளவும்.

மானேஜர் “வர்த்தக ஊழியன்”
திருச்சினுப்பள்ளி,

MYSORE PAGE.

Electricity.

The annual Report on the administration of the Mysore Electrical Department for the year 1932-33, which has been now reviewed by the Government, shows that the receipts (Rs. 52·30 lakhs) exceeded the Budget Estimates by Rs. 2·62 lakhs. The arrears at the close of the year stood at Rs. 3 lakhs, of which a sum of Rs. 2,28,000 has since been collected. The balance of Rs. 7,2000 is due from some Government Departments and Municipalities. The Government observe that the Chief Electrical Engineer should take all possible steps to reduce the arrears. The percentage of working expenses to gross receipts was 20·86 against 21·34 in 1931-32 and 22·27 in 1930-31. The capital outlay on electrical works up to the end of the year was Rs. 284.62 lakhs, exclusive of the expenditure incurred on Krishnarajasagara works.

